**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், போளூர், திருவண்ணாமலை மாவட்டம்**

2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 05 ஆம் நாள் வியாழன் கிழமை 1873 ம் ஆண்டு 11 வது ஏற்பாட்டின்படி திரு.G.வீராங்கன், கிரேடு III பென்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு உறுதி செய்யப்படுகிறது.

**OS.No.149/2020** வா.சா.2 என்பவரின் வாக்குமூலம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்** | : | டி.மகேந்திரன் | **வயது** | : | 49 |
| **த.பெ** | : | தஞ்சியப்ப கவுண்டர | **தாலுக்கா** | : | போளூர் |
| **கிராமம்** | : | போளூர் | **தொழில்** | : | வழக்கறிஞர் |

**05.03.2026 – வா.சா.2 முதல் விசாரணை**

நான் இந்த வழக்கில் நீதிமன்ற ஆணையர். தாவா எ மற்றும் பி அட்டவணை சொத்துக்களை நான் கடந்த 24.07.2021 அன்று காலை 10.30 மணியளவில் பார்வையிட்டேன். என்னுடன் வாதி மற்றும் வாதி வழக்கறிஞர், பிரதிவாதி மற்றும் பிரதிவாதி வழக்கறிஞர் நில அளவையர், கிராம நிர்வாக அலுவலர் உடனிருந்தனர். முதலில் தாவா எ அட்டவணை சொத்தை அளவீடு செய்தததில் எசிடிஎப் தாவா அட்டவணை சொத்தாகும். எபிஎப்இ தாவா பி அட்டவணை சொத்தாகும். எனது வரைபடத்தில் அளவுகள் குறிப்பிட்டுள்ளேன். தாவா எ அட்டவணையின் ஒருபகுதி தான் தாவா பி அட்டவணை சொத்தாகும். தாவா எ அட்டவணைசொத்தின் சர்வே எண் 7/18, புதிய சர்வே எண் 7/50 என வருவாய் துறை ஆவணங்களில் காணப்பட்டன. தாவா பி அட்டவணை சொத்தின் கி.மே 1 அடி, வ. தெ 63 அடி, வாதியின் இடத்தை பிரதிவாதி ஆக்கிமிப்பு செய்து கட்டிடம் கட்டியுள்ளார். மேற்படி தாவா எ அட்டவணை மற்றும் பி அட்டவணை நில அளவையர் வரைபடத்துடன் எனது வரைபடத்துடனும் அறிக்கை தாக்கல் செய்துள்ளேன். மேற்படி எனது அறிக்கை **நீ.சா.ஆ-1** ஆகவும், வரைபடம் **நீ.சா.ஆ-2** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.

முதல் விசாரணை முடிவடைந்தது.

Taken down by me in open court read over to the witness and acknowledged by him/her to be correct.

SALMA BASEER Digitally signed by SALMA BASEER Date: 2026.03.05 17:37:58 +0530

District Munsif,
Polur.